DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 272/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 2 |
| Name | பாண்டி |
| Father / Husband Name | கொங்கு |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 20th June 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவில் தாலுகா, முடிக்கரையில் குடியிருந்து வருகின்றேன். நான் சிரமம் கொங்கையா கோவில் பூசாரியாக இருந்து வருகின்றேன். விபத்தில் காயம்பட்டு இறந்த இராமையாவும் கொங்கையா கோவில் பூசாரியாக வேலை செய்து வந்தார். அ.சா.1 ஐத் தெரியும் அவரும் அந்த கோவிலில் பூசாரியாக இருக்கிறார். கடந்த 21.01.2020 ம் தேதி மாலை 04.00 மணியளவில் இராமையாவிற்கு விபத்து ஏற்பட்டதாக கோவிலில் இருந்தவர்கள் தகவல் சொன்னார்கள்.

2) தகவல் தெரிந்து நானும், மற்றவர்களும் இராமையாவை

பார்ப்பதற்காக சம்பவம் இடத்திற்கு வருவதற்குள் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார்கள். மதுரை மருத்துமவனையில் வைத்து தான் இராமையாவை பார்த்தேன். அவருக்கு கை, கால், தலை, பல் ஆகியவற்றில் காயம் இருந்தது. மாதவன் என்பவர் குடிபோதையில் வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டதாக பேசிக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

1) போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த மறுநாள் இராமையாவை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு சென்றிருந்த போது விசாரித்தார்கள். எந்த மருத்துவமனையில் என்னை விசாரித்தார்கள் என்றால் மறவமங்களம் மருத்துவமனை. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை மாதவன் தான் ஓட்டி வந்தார் என்று யார் எனக்கு தகவல் சொன்னது என்றால் மறவமங்களத்தில் ஆட்கள் பேசிக்கொண்டார்கள்.

2) இறந்த நபர் என்னுடன் கோவில் பூசாரியாக வேலை செய்து வந்தவர் என்றால் ஆமாம். இறந்த நபர் என்னுடன் வேலை செய்து வந்தவர் என்பதால் வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 20.06.2023
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**